மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *சீக்கிரம் உரையை முடியுங்கள்.*

திரு. கு. லிங்கமுத்து: *இந்த நிலை தொடர்ந்து நீடிக்காமல், சுடுகாடு இல்லாத பகுதிகளில் சுடுகாட்டிற்கான இடமும், பாதையும் அமைக்க வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் வீட்டுமனை வேண்டுமென்று கோரியுள்ளார். 2014—2015 ஆம் நிதியாண்டில் மட்டும் ரூ.512.93 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. 2012—2013 ஆம் நிதியாண்டில் ரூ.298.51 இலட்சம் செலவில் 1,903 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. 2013—2014 ஆம் நிதியாண்டில் ரூ.252.51 இலட்சம் செலவில் 912 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

திரு. கு. லிங்கமுத்து: *ஆதி திராவிடப் பெண்களை மட்டுமே கொண்டு செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குத் தொழில் தொடங்க அதிகபட்சம் ரூ.10 இலட்சம் சுழல் நிதி வழங்க வேண்டும். ஆதி திராவிட இளைஞர்கள் சுய உதவிக் குழுக்களை அதிக எண்ணிக்கையில் தொடங்கவும், சிறு தொழில் தொடங்கவும் தொழிற்பயிற்சி வழங்க தமிழக அரசு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். பெண்கள் விடுதிகளில் வார்டன்களாகவும், சமையலர்களாகவும் பெண்களை நியமிக்க வேண்டும். சமையலர்கள், ரிக்கார்டு கிளார்க், அலுவலக உதவியாளர்கள் போன்ற பதவி உயர்வு அளிக்கவேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *உரையை முடியுங்கள்.*

திரு. கு. லிங்கமுத்து: சமீபத்தில் பணி வழங்கப்பட்ட துப்புரவுப் பணியாளர்கள், இரவுக் காவலர்களுக்கு மிகவும் குறைந்த ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. இவர்களை நிரந்தரப் பணியாளர்களாக்கி, காலமுறை ஊதியம் வழங்கவேண்டும். ஆதி திராவிட நலப் பள்ளிகளில், கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு அந்தக் கல்வி ஆண்டின் தொடக்கத்திலேயே கல்வி கற்பதற்கான நிதியுதவி வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். SC, ST மக்களுக்கு தாட்கோமூலம் தொழில் தொடங்க கடன் வழங்கும்போது, மற்ற மாநிலங்களில் 10 சதவீதம், 20 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. ஆனால், தமிழக அரசு 30 சதவீதம் மானியம் வழங்குவது வரவேற்கத்தக்கது. அந்தக் கடன்களை மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட பிணையமில்லாக் கடன் நிதியிலிருந்து Credit Guarantee Fund–லிருந்து வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். என்னுடைய தொகுதி சம்பந்தமான ஒரே ஒரு கோரிக்கையைச் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களால் உத்தரவிடப்பட்டு கட்டப்படத் தொடங்கிய பத்திரபல்லி அணை, பாதியில் நிறுத்தப்பட்டுள்ளது, இது மீண்டும் கட்டி முடிக்கப்பட்டால் பேரணாம்பட்டு நகர ஒன்றியப் பகுதிகளுக்கு நல்ல குடிநீர் கிடைக்குமென்பதைத் தெரிவித்து, உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தாட்கோ லோன் பற்றிச் சொன்னார். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றபின் தாட்கோமூலம் பெறும் கடன்களுக்கான மானியத்தை ரூ.25,000/–லிருந்து ரூ.2,25,000/– இலட்சம் வரை, திட்டத்தொகையில் 30 சதவீதமாக உயர்த்தி வழங்கியுள்ளார்கள். 2011–2012 ஆம் ஆண்டு முதல் 2013–2014 ஆம் ஆண்டு வரை மூன்றாண்டுக் காலத்தில் 1,29,175 பயனாளிகளுக்கு 262.53 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.